<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

Spl.CC 102/2025 (Spl.cc 5/2014of CJM Court)

அரசுதரப்பு 6 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிவேல் | வயது | : | 54 |
| தந்தை/ கணவர் பெயர் | : | நடராஜன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 04.02.2026ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது

**அரசு தரப்பில் முதல் விசாரணை –**

நான் திட்டக்குடி வட்டம், பௌந்துரையில் வசித்து விவசாயவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும், எங்கள் ஊரில் முன்பு வி.ஏ.ஓ வாக இருந்தார். எங்கள் ஊரை சேர்ந்த இளங்கோவன் என்பவரை தெரியும். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. சுமார் 12 வருடங்களுக்கு முன்பு நான் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த போது பௌந்துரை கிராம உதவியாளர் சிவா எனக்கு போன் செய்து வி.ஏ.ஓ. சார் பணம் வாங்கிவிட்டதாகவும் அது சம்பந்தமாக என்னை ஆபிசுக்கு வர சொல்லியும் என் பெயரை சேர்த்திருப்பதாகவும் என்னிடம் சொன்னார். நான் உடனே பென்னடம் வி.ஏ.ஓ அலுவலகத்திற்கு சென்றேன்.

கடலூர் லஞ்ச ஒழிப்பு துறையினை சேர்ந்த போலிசார் அங்கிருந்தார்கள், என்னிடம் வி.ஏ,ஓ பணம் வாங்கிய வழக்கில் சேர்த்திருப்பதாக சொன்னார்கள். நான் எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னேன். என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். வேறு எதுவும் கேட்கவில்லை, வேறு யாரும் அங்கு இல்லை. வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருத அரசுதரப்பில் அனுமதி கேட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

கடந்த 2012 ஆம் ஆண்டு நான் பௌாந்துரை வி.ஏ,ஓ அலுவலகத்தில் இருந்த போது அங்கு வந்த எங்கள் ஊரை சேர்ந்த இளங்கோவன் என்பவர் வி.ஏ.ஓவிடம் பட்டா மாற்றம் செய்ய சொல்லி சொல்லுமாறு என்னிடம் சொன்னார் என்றும், நான் அவரிடம் குடும்ப தகராறு காரணமாக பேசமாட்டேன் என்பதால் என்னுடன் இருந்த மாயாண்டி என்பவர் பட்டா மாற்றம் செய்ய ரூ.1800/– வி.ஏ,ஓ, விடம் கொடுக்க வேண்டும் என்று கூறினார் என்றும், பின்பு இளங்கோவன் வி.ஏ.ஓ அலுவலகம் வந்து ஆஜர் எதிரியுடன் பேசிக்கொண்டிருந்தார் என்றும் பிறகு 27.11.2012 அன்று காலை 8.00 மணிக்கு என் நிலம் சம்பந்தமாக ஆஜர் எதிரிக்கு நான் போன் செய்து பேசினேன் என்றும் பின்பு அவரது அலுவலகம் சென்று காலை 8.30 மணிக்கு நிலத்திற்கான சிட்டாவை அவரிடம் வாங்கி வந்தேன் என்றும் பின்பு காலை 11.00 மணிக்கு ஆஜர் எதிரி பட்டா மாற்றம் செய்வதற்காக எங்கள் ஊரை சேர்ந்த இளங்கோவனிடம் லஞ்சம் வாங்கிய குற்றத்திற்காக கைது

செய்யப்பட்டதாக கேள்விபட்டேன் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

2011 ஆம் ஆண்டு எதிரியுடன் பணிபுரிந்த கிராம நிர்வாக உதவியாளர் பெயர் ராதாகிருஷ்ணன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ள சிவா என்பவர் தற்போது கிராம நிர்வாக உதவியாளராக பணியில் உள்ளார். அவர் தான் என்னிடம் சம்மன் வந்துள்ளதாகவும், நீதிமன்றத்திற்கு வரவேண்டும் என்றும் கூறினார். பணம் வாங்கிவிட்டதாக ஒரு வழக்கில் நான் சாட்சியாக சேர்க்கப்பட்டதாகவும் நீதிமன்றத்திற்கு போக வேண்டும் என்றும் கூறினார். இந்த வழக்கு பற்றி வேறு எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது.